# இரத்தினராசா என்னும் கலங்கரை விளக்கு!


## ஆ. அரவிந்தநாதன்

முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர்

நிர்வாகசபை உறுப்பினர்

வேலணை ம.ம.வி. பழைய மாணவர் சங்கம்-கனடா




மார்ச் 30! 1998ஆம் ஆண்டு தாங்க முடியாச்செயல்நடந்துவிட்ட நாள்! மறக்க முடியாத நாள்! மனத்துயர் நிறைந்த நாள்!

அன்புக்கு நண்பனாக, அறிவு கூறும் ஆசானாக, தோளோடு தோள் நிற்பவனாக, கல்விக்கோர் அணிகலமாக, கடமையிலே கண்ணியமாக, கட்டுப்பாட்டின் இலக்கண மாக, அஞ்சா நெஞ்சினனாக, நாடியே வருப வர்களுக்கு நயம்படக் கதைகள் கூறுபவ னாகச, வாடிவதைபட்டவர்களுக்கு வழி காட்டியாக, மற்றவர்களுக்கு உதவுவதில் மலையாக விளங்கிய கல்விப்பணிப்பாளர் திரு.சுப்பிரமணியம் இரத்தினராசா அவர் களின் பண்புகண்டு ஆற்றலைக்கேட்டு இன்புற்றார் அனைவரும் அவர் நோயுற்றார் எனக்கேட்டுத் துன்புற்றார் துன்ப மேலீட்டி னால் என்புற்றார். அந்த அளவுக்கு மானிட நேயத்தை மிகுதியும் பெற்றுக் திகழ்ந்த திரு. இரத்தினராசா அவர்கள் 30-03-1998 அன்று சென்னை அப்பலோ மருத்துவ மனையில் இறைவனடி சேர்ந்த செய்திகேட்டு நாம் அனைவரும் ஆழாத் துயருற்றோம்.

நாம்பெறும் பேறுகளுள் அறிவு டைய மக்கட்பேற்றைவிடச் சிறந்த பேறு வேறொன்றிருப்பதாக நாம் கண்டதில்லை. அதற்கிணங்க வேலணையின் சிறப்பு மிகு குடும்பத்தில் சுப்பிரமணியம் முத்தம்மா தம்பதிகளின் இரண்டாவது மகனாக 26-12-1942 அன்று தோன்றியவர் தான் அமரர் சு. இரத்தினராசா அவர்கள். தமது ஆரம்பக்கல்வியை வேலணை சரஸ்வதி வித்தியாலயத்திலும், இடைநிலைக்கல்வியை வேலணை மத்திய மகா வித்தியாலயத்திலும் உயர்தரக்கல்வியை யாழ். வைத்தீஸ்வராக கல்லூரியிலும் கற்றார். இக்கல்விச்சாலை களின் விளையாட்டுப் போட்டிகளில் தீவிர பங்குகொண்டதோடு தனது திறமையைக் காட்டி வெற்றிகளையும் அடைந்துள்ளார். அதேபோல் கலை நிகழ்ச்சிகளிலும் கலந் திடத் தவறவில்லை. நாடகத்துறையில் தன்னை இனங்காட்டிக் கொண்டார். கல்லூரிப்பரிசளிப்பு விழாவில் இவர் நடிக்கும் நாடகம் இடம் பெறுவதோடு பரிசில் பெறும் மாணவர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார். அதேநேரத்தில் பயிர்ச்செய்கையில் தனக்கு ஈடாக எவருமில்லை என்றளவுக்குக் குடும்பத்திற்குப் பக்கபலமாக இருந்தார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தன் பட்டமேற்படிப்பைத் முடித்தபின் தொடர்ந்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பின் பின் படிப்பையும் வெற்றியோடு நிறைவாக்கி ஆசிரியப்பணியில் தன் தொழில் வாழ்வை அர்ப்பணிப்போடு செயற்படுத்தினார். கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி, நெடுந்தீவு மகாவித்தயால யம், வேலணை மத்திய மகாவித்தியாலயம் ஆகிய கல்விச்சாலைகளில் தன் இனிய சேவையால் மாணவர்களது உள்ளம் நிறைந்த நன்றிக்குரிய ஆசிரியராக விளங் கினார்.

திருமண வாழ்வில் கண்நிறைந்த மனையாளாக கொக்குவில் மேற்கைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் மாணிக்கம் பாக்கியம்தம்பதி களின் ஏகபுத்திரியான யோககேஸ்வரியைக் கரம்பற்றி காவேரி, மயூரன் என்னும் இரு பிள்ளைச் செல்வங்களைப் பெற்றுச் சிறந்த குடும்பத் தலைவனாகத் திகழ்ந்தார்.

வல்லமைமிக்க இரத்தினராசா அவர் கள் படிநிலை ஏற்றமாக இல்லாது S.L.E.A.S தேர்வில் 1980களில் புகழ்மிக்க பேற்றினைப் பெற்று கண்டிமாவட்டத்தில் நாவலப்பிட்டி யின் வட்டாரக்கல்வி அதிகாரியாகத் திகழ்ந் தார். தாயகப்பற்று மேலிட யாழ்ப்பாணம் கல்விப்பணியில் வேலணைக் கோட்டத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையை ஏற்று பிறந்த மண்ணின் வேதனைகளைச் சாதனைகளாக்கிடத் தீவகத்தின் மூலைமுடுக் கெல்லாம் கல்விமுழக்கம் செய்திடமுனைந்த வேளை காலத்தின் கோலம் அவரை மருத னார் மடத்தில் உடுவில் கோட்டப்பிரதிக் கல்விப் பணிப்பாளராகத் திகழச்செய்தது.

இடப்பெயர்வுக் காலத்தில் இடமாற் றத்தின் கடுமையை இவரது பணிப்புக்குக் கீழிருந்தவர்கள் யாரும் உணர்ந்ததாக இல்லை. கடமையில் கட்டுப்பாடுகள் இருந் தாலும் கண்ணியமான தண்ணொளியை அவரதுமுகத்தில் கண்டனர். பிறந்த மண் ணையும் கல்விகற்ற பாடசாலையையும் தரிசிப்பது சந்நிதானத்திற்குப் போவது போலாகும் எனப்பகிரங்கமாக உரைத்திட்ட நன்றி மறவா நாயகன்.

மழைக்காலப் பயிர்போல இவரது பதவியின் தரமும் வளர்ச்சியுடன் உயர்ந்தது. இதேவேளை சட்டத்துறையிலும் கவனத் தைச் செலுத்தி முதனிலை வகுப்பில் தேர்ச்சியும் பெற்றார். உடுவில் கோட்டத்தின் செயற்பாடு கல்வி அமைச்சில் மிக ஆழமா கப் பதிந்தது. அதனால் யாழ்வலையம்-1இன் வெற்றிடம் 10.02.1997இல் அமரர் அவர்க ளால் புகழ்பெற்றது. அன்னார் கல்விப் பணிப் பாளராகப் பதவிஏற்றபொழுது எதிரிகள் நண்பராகினர், கடமையில் கண்ணாயிருந்த வர்கள் உளமகிழ்ந்தனர். நேரம் தனது எதிரி என்பது ஆங்கிலேயர் பழமொழி. நேரம் தவறாது கடமையாற்றுவதில் தனக்கு நிகர் யாருமில்லை எனச்செய்துகாட்டிய செம்மல்.

யாழ்ப்பாண மக்களின் சொத்து கல்விதான் என்பதை நன்குணர்ந்த திரு. இரத்தினராசா அவர்கள் அந்தக்கல்வியைப் பெறுவதற்கேற்றவாறு கல்விச்சாலைகள் அமையவேண்டும், மக்கள் மனம்மாற வேண்டும், எல்லா வளமும் பொருந்திய கல்வி நிலையங்களை உருவாக்கிட வேண்டும், அதனை வளர்த்திடவேண்டும் என்ற உயரிய இலட்சியத்துடன் கடமை யாற்றினார்.

தனது மரணம் தன்னை நோக்கி வந்து கொண்டிருக்கிறது என்பதை நன் குணர்ந்திருந்த அன்னார், அது இவ்வளவு விரைவில் அமையும் என்பதை அவர்மட்டு மல்ல எவரும் எதிர்பார்க்கவில்லை. அதனால் தன்னால் ஆகவேண்டியவைகளை நிலுவை களின்றிச் செய்திடத்துடித்தது அவர் நெஞ்சு. தன்னுடன் பணியாற்றுபவர்கள் துடிப்பானவர்களாகவும் பிறரால் புகழப்படக் கூடியவர்களாகவும் தன்னலமற்ற பகுத் தறிவாளர்களாகவும் விளங்க வேண்டுமென விரும்பிய இவர் இறந்துவிட்ட செய்தி கேட்டவுடன் தவறாகக் கணக்கிட்டவர் களும் மனிதநேயம் படைத்த ஒரு கல்விப் பணிப்பாளரை இழந்துவிட்டோம் என வாய்விட்டு அழுதனர். நல்லதோர் உடன் பிறப்பை இழந்துவிட்டோம் என எல்லோர் உள்ளமும் விம்மின! கல்விச் சமூகத்தின் கல்விக்கதிர், கல்வி உலகின் திசைகாட்டி, கல்விப் பணிப்பாளர் இரத்தினராசா எனும் கலங்கரை விளக்கு அணைந்து ஓராண்டு ஆகிவிட்டாலும் அவரது புகழ் இன்னும் பல நூற்றாண்டு வாழும் என்பதில் ஐயமில்லை.

***